# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 197/மா/2022**
**நாள் : 24.11.2022**

திரு. K. ஜோதிலிங்கம்,
சென்னை– 97. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மேட்டுக்குப்பம், இந்திரா காந்தி தெரு, 3/358 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. ஜோதிலிங்கம் என்பவரின் 3.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 197/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மேட்டுக்குப்பம், இந்திரா காந்தி தெரு, 3/358 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. ஜோதிலிங்கம் என்பவரின் முறையீட்டு மனுவில்,

"நான் மேற்சொன்ன முகவரியில் வசிக்கிறேன். எங்கள் பகுதியில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். எங்கள் பகுதியில் உள்ள மக்களுக்கு நடைப்பயிற்சி செய்யவும் குழந்தைகள் விளையாடுவதற்கும் மாநகராட்சி பூங்கா ஏதுமில்லை. எங்கள் பகுதியில் உள்ள காமராஜர் தெருவில் அமைந்துள்ள Casagrand, Pallagio, Bhaggyam Griha மற்றும் ஃபவுண்டரி சாலையில் அமைந்துள்ள Shiva's Bhaggyam, Loyal Enclave, Bhaggyam Urban – Villa போன்ற தனி நபர் குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் மாநகராட்சிக்கு வழங்கிய OSR (Open Space Reservation) நிலத்தில் மாநகராட்சி பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி எங்கள் பகுதியிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் Ceebros மேட்டுக்குப்பம் மற்றும் IT நிறுவனங்களான ASV Sun Tech Park மேட்டுக்குப்பம், ASV Sun Tech Park, மூட்டைக்காரன் சாவடி, AKDR Tower போன்ற தனியார் நிறுவனங்கள் மற்றும் எங்கள் வார்டில் உள்ள சில அடுக்குமாடி குடியிருப்புகளும் இந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்படுத்த முடியாதவாறு அவர்கள் குடியிருப்பு வளாகத்திற்குள் அந்த பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநகராட்சிக்கு வழங்கிய OSR (Open Space Reservation) நிலத்தில் அமைக்கப்பட்ட பூங்காவிற்கு பொதுமக்கள் செல்ல முற்பட்டால், குடியிருப்பு நுழைவாயில் உள்ள

காவலாளிகள் தடுத்து நிறுத்தி உள்ளே செல்லகூடாது என்று மிரட்டுகிறார்கள். எனவே, மேற்சொன்ன சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இந்த குடியிருப்புகள் சென்னை மாநகராட்சிக்கு வழங்கிய OSR (Open Space Reservation) நிலத்தில் அமைக்கப்பட்ட மாநகராட்சி பூங்காக்களை மீட்டெடுத்து நானும் என் பகுதி மக்களும் எந்த ஒரு தனி நபர் இடையூறும் இல்லாமல் உபயோகப்படுத்திட வழிவகை செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 14.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 8.11.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 14.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மேட்டுக்குப்பம் பகுதியில் உள்ள காமராஜர் தெருவில் Casagrand, Pallagion, Bhaggyam Griha, Loyal Enclave போன்ற தனியார் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைந்துள்ளன. அங்குள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மாநகராட்சிக்கு வழங்கிய OSR நிலத்தில் மாநகராட்சி பூங்கா அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், அப்பூங்காவை எங்கள் பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்படுத்தாதவாறு நுழைவாயில் மாநகராட்சி அலுவலர்களால் பூட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட பூங்காவைத் தவிர வேறு எந்த பூங்காவும் எங்கள் பகுதியில் இல்லை. எனவே, எங்கள் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவை தனிநபர் இடையூறு இல்லாமல் பொதுமக்கள் பயன்படுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் செயற் பொறியாளர் 14.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மேட்டுக் குப்பம் பகுதியில் உள்ள காமராஜர் தெருவில் Casagrand, Pallagion, Bhaggyam Griha, Loyal Enclave போன்ற தனியார் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைந்துள்ளன. மேற்கண்ட காமராஜர் தெருவில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா தற்போது மூடப்பட்டுள்ளது. பொதுமக்களின் கோரிக்கைக்கேற்ப மேற்கண்ட பூங்கா இன்னும் ஓரிரு நாட்களில் திறக்கப்பட்டு அதனை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் என கூறியுள்ளார்.

**பூங்காக்கள் நிர்வாகம் குறித்து கீழ்க்கண்டவாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் வலையத்தளத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.**

**Right To Information Act – Particulars of Park Department : Greater Chennai Corporation**

Parks are integral part of a happy healthy city. Parks provide gathering places for families and social group as well as for individuals of all ages and economics status regardless of their ability to pay for access.

The Park department is one of the engineering cum horticulture departments of Greater Chennai Corporation. This department is in-charge of creation of new parks and development of

green spaces along the road margins etc. This department is principally controlled by Principal Chief Engineer as per Council resolution P.D.C.No.P1/1249/2016, date: 21.02.2017 and headed by Chief Engineer and Superintending Engineer. One Executive Engineer (i/c) on doing duty arrangements from Quality Control Department, three Assistant Executive Engineers and nine Assistant Engineers are working under Superintending Engineer at the head quarters to execute the various project work of Park department.

**I) Functions of Park Department:**

- The main functions of Park Department are as follows:-
- Creation of new parks in the vacant OSR Land vested with Greater Chennai Corporation. Development of Green Spaces along the road margins, Corporation / Government buildings and public places.
- Granting permission for companies/firms/banks, RWA for maintenance of parks as well as for plantation works under CSR Activity.
- Granting permission for cultural activities inside parks.
- To attend Court matters, Councilor's Questions and Answers, C.M.cell/Mayor petition and obtaining the respective Committee's approval related to parks works.

**Powers and duties of Officers and entrusted Employees**

Superintending Engineer/Park Department is the Head of the Department controlling all the works with Park Department with the assistance of Executive Engineers, Asst.Exe.Engineers, Assistant Engineer, Junior Engineers, Section Manager, Assistants, Junior Assistant, Shorthand Typist, Typist and Park overseer. The employees under the control of Superintending Engineer/Park should discharge the duties entrusted to them.

**DUTIES AND RESPONSIBILITIES OF ENGINEERS JUNIOR ENGINEERS/ASSISTANT ENGINEERS**

- Prepare schedule of rates for park works along with detailed data for every year.
- Undertake investigation, design and preparation of estimates, for creation of Parks and Playfields.
- Prepare Technical report for the works along with estimates.
- Prepare tender schedules along with estimates before calling for tenders.
- Prepare comparative statement of tenders for placing it before the appropriate authority for sanction.
- Prepare chart to monitor the progress of work
- Maintain files relating to various works containing plans, estimates properly and furnish them for reference whenever required by the officer.
- Inspect the work regularly to ensure quality and timely completion.
- Check the quality of materials used for construction and reject materials below standard.
- Take samples and arrange for testing quality control periodically.
- Record measurements during progress of works periodically.
- Assist Junior Assistants / Assistants to prepare note for Commissioner and Special Officer in Council for approval of estimate/tender.

- ❖ Maintain diaries at site in the form prescribed; keep records like copies of plans, estimates and M.Book at site.
- ❖ Any other items of work which may be entrusted or required for completion of work.

**ASSISTANT EXECUTIVE ENGINEER**

- o Attend to verification of investigation for Park works.
- o Guide in plans, estimates and tender schedules.
- o Prepare comparative statement for finalization of tender.
- o Arrange for prompt issue of work order and commencement of works by contractor.
- o Attend to finalization of tenders and issue of work orders.
- o Monitor the commencement and progress of works including physical progress.
- o Take samples and check the quality of work periodically.
- o Supervise personally R.C.C. works in progress and ensure quality of water, cement etc., used for the work and ensure proper water cement ratio for R.C.C. works.
- o To instruct the Assistant Engineer to check for work progress and to take action against the contractors for delay or slow progress of work.
- o Check measure the work periodically depending upon the nature of works.
- o Arrange for prompt procurement and supply of various material required for works.
- o Review diaries of Assistant Engineers / Junior Engineers / Assistant Draughtsman and Draughtsman fortnightly.
- o Prepare charts for monitoring of all works.
- o Any other duties of special nature assigned by the authorities during natural calamities and other important occasions.

**EXECUTIVE ENGINEER**

- ➢ Monitor investigation of Parks works.
- ➢ Supervise the preparations of plans, estimates and tender schedules, obtaining administrative as well as technical sanction for various estimates.
- ➢ Call for and settle Tenders for various estimates and issue work orders.
- ➢ Monitor the commencement and progress of works including physical progress.
- ➢ Monitor the qualitative and quantitative aspect of works by taking samples and testing the same periodically.
- ➢ Super check measure the work periodically depending on the nature of work.
- ➢ Take action against the contractors for delay, slow progress and poor quality.
- ➢ Super check centering work, steel fabrication, quality of material collected at site before commencement of concreting for R.C.C. work.
- ➢ Supervise personally R.C.C. works in progress and ensure quality of water, cement etc., used for the work.
- ➢ Guide in preparation of charts for monitoring progress of all works.
- ➢ Draw and disburse pay for all staff.
- ➢ Maintain leave account and Service Registers for the staff.
- ➢ Settle retirement and other nature assigned by the authorities during natural calamities and other important occasions.

மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றை பரிசீலித்ததில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் குறிப்பிட்டவாறு, மேட்டுக்குப்பம் காமராஜர் தெருவில் உள்ள Casagrand, Pallagion, Bhaggyam Griha, Loyal Enclave வில்லாக்கள் மற்றும் தனி நபர் குடியிருப்புகள் மாநகராட்சிக்கு வழங்கிய OSR (Open Space Reservation) இடத்தில் மாநகராட்சி பூங்காக்கள் இருந்தாலும், அவை தனியார் வசம் உள்ளதால், அதனை அப்பகுதி மக்கள், குழந்தைகள் போன்றோர் பயன்படுத்திக்கொள்ள இயலாத நிலை உள்ளது என மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்கண்ட பகுதியில் அமைந்துள்ள காமராஜர் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா இருப்பதும் அப்பூங்கா தற்சமயம் மூடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட காமராஜர் தெருவில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா தற்போது மூடப்பட்டுள்ளது. பொதுமக்களின் கோரிக்கைக்கேற்ப மேற்கண்ட பூங்கா இன்னும் ஓரிரு நாட்களில் திறக்கப்பட்டு அதனை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 15 செயற் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பூங்காக்கள் எவ்வாறு பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் அவற்றிற்கான பணிகள் போன்றவைகள் குறித்து மாநகராட்சி பூங்காத் துறைக்கான மேற்கண்ட தெளிவுரைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி மண்டலம்-15ல் உள்ள அலுவலர்கள் செயல்பட்டிருந்தால், இவ்வாறான புகார் மனுக்களை தவிர்க்கலாம் என இம்முறைமன்றம் சுட்டிக் காட்ட விரும்புகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் பூங்காதுறைக்கான சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பூங்கா அமைப்பதினால் ஏற்படும் சுற்றுப்புற சூழல், நன்மைகள், பொதுமக்கள் குறிப்பாக வயோதியர்கள், குழந்தைகள் ஆகியோருக்கு ஏற்படும் நன்மைகள் குறித்த விழிப்புணர்வு இல்லை என்றே இம்முறைமன்றம் கருதுகிறது. மேலே குறிப்பிட்டுள்ள தெளிவுரைகள் குறித்து எந்தவித ஆர்வமும், அக்கறையையும் எடுத்துக்கொள்ளாத மண்டலம்-15ன் அலுவலர்களின் செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கது ஆகும்.

மேட்டுக்குப்பம், காமராஜர் தெருவில் தற்போது மூடப்பட்டுள்ள பூங்காவினை ஓரிரு நாட்களில் திறக்கப்படும் என்று, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் செயற் பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்ததை, மனுதாரர் புகார் மனு அளித்தவுடன் செயல்படுத்தியிருந்தால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நற்பெயர் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு மண்டல அலுவலர்கள் செயல்படாதது அவர்கள் பணியில் சுணக்கம் காட்டுவதாகவே இம்முறைமன்றம் கருதுகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -15ன் செயற்பொறியாளர் 14.11.2022 தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறும், பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா துறையில் குறிப்பிட்டுள்ள பூங்காக்களுக்கான பராமரிப்பிற்கான பொறுப்புகள், தெளிவுரைகள் மற்றும் பணிகளை கருத்தில் கொண்டும், மேட்டுக்குப்பம் மக்கள் குறிப்பாக, வயோதிகர்கள் மற்றும் குழந்தைகள் உடல் நலத்தினை கருத்தில் கொண்டும் மேட்டுக்குப்பம் காமராஜர் தெருவில் தற்போது மூடப்பட்ட நிலையில் உள்ள பூங்காவினை விரைவில் திறக்கப்பட்டு அதனை பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவர அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு

அனுப்பிவைக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல - 15 அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. K. ஜோதிலிங்கம்,
   வழக்கறிஞர்,
   எண்.3/358, இந்திராகாந்தி தெரு,
   மேட்டுக்குப்பம், (OMR),
   சென்னை – 600 097.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (பூங்கா)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
   } *He is requested to ensure the implementation of this order*
4. மண்டல அலுவலர்,
   மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
   120, ராஜீவ் காந்தி சாலை, (OMR)
   சோழிங்கநல்லூர், சென்னை- 600 119.
5. துணை ஆணையர்,
   மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
   120, ராஜீவ் காந்தி சாலை, (OMR)
   சோழிங்கநல்லூர், சென்னை- 600 119.
   } *He is requested to ensure the implementation of this order*
6. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்**: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032

செயலாளருக்காக.
22/11/22
7/10